# A

**17233** **120 MINUTES**

1. மென்னடை மரையா துஞ்சும் நன்மலை நாட நின்னல திலளே - கூறியது.

A) செவிலி B) பாங்கன்
C) தோழி D) தலைவி

2. ஆராய்ந்தெழுதுக.

1. குறுந்தொகைப் பாடல்களிலான சிறந்த சொற்றொடரால் சிலபுலவர்களின் பெயர்கள் அமைக்கப்பட்டுள்ளன.
2. மூன்றடிகளில் பாடல்கள் அமைந்தமையால் குறுந்தொகை எனப்பெயர் பெற்றது
3. பூரிக்கோ என்பவரால் தொகுக்கப்பட்டது.
4. குறுந்தொகையைத் தொகுத்தவர் உப்பூரிக்குடிக்கிழார் என்பவராகும்.

A) 1, 2 சரி B) 1, 3, 4 சரி
C) 1, 2, 3 சரி D) அனைத்தும் சரி

3. சூர்மலை நாடன் கேண்மை நீர்மலி கண்ணொடு நினைப்பாகின்றே" என்ற குறுந்தொகைப் பாடல் அமைந்த துறை:

A) வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியது
B) பாங்கன் தலைமகற்குச் சொல்லியது
C) வினை முற்றிய தலைமகன் பருவ வரவின்கண் சொல்லியது.
D) தோழி செறிப்பறிவுறீ இயது.

4. ஆயிர வெள்ள வூழி வாழியாத வாழிய பலவே" என வாழியாதனை வாழ்த்தியவர்

A) பரணர் B) கபிலர்
C) நக்கீரர் D) அரிசில்கிழார்

5. நட்டோர்க்கல்லது கண்ணஞ்சலையே, எனப்போற்றப்பட்டவன்

A) கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன்
B) இளஞ்சேரல் இரும்பொறை
C) பெருஞ்சேரல் இரும்பொறை
D) செல்வக் கடுங்கோவாழியாதன்

6. ஆராய்ந்தெழுதுக

1. நெடுநல்வாடையில் பாண்டியனின் அடையாளப்பூ சுட்டப்பட்டமையால் புறத்திணையாயிற்று.
2. பாண்டியன் நெடுஞ்செழியன் காமத்திடத்து வெற்றியெய்தினகாரணம் பற்றி வாகைத்திணையாயிற்று என்றார் நச்சினார்க்கினியர்.
3. நெடுநல்வாடை மாங்குடி மருதனார் பாடியது.
4. வடந்தைத் தண்வளி பெறுதொறு நுடங்கி" எனத்தென்றலின் தலையாட்சி கூறப்படுகின்றது.

A) 1, 2 , 3 சரி B) 2, 3, 4 சரி C) 1, 2 சரி D) 3, 4 சரி

7. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| a) | நெடுநல்வாடை | - | 1. நப்பூதனார் |
| b) | பட்டினப்பாலை | - | 2. மாங்குடி மருதனார் |
| c) | முல்லைப்பாட்டு | - | 3. கடியலூார் உருத்திரங்கண்ணனார் |
| d) | மதுரைக்காஞ்சி | - | 4. நக்கீரர் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 3 | 4 | 2 | 1 |
| B) | 4 | 3 | 1 | 2 |
| C) | 2 | 1 | 3 | 4 |
| D) | 1 | 2 | 4 | 3 |

8. வடநாட்டு வேந்தனுக்கு நம்நாட்டு அகப்பொருள் சிறப்பைக் காட்டப் பாடப்பட்ட நூல்

A) முல்லைப்பாட்டு B) நெடுநல்வாடை
C) குறிஞ்சிப்பாட்டு D) பட்டினப்பாலை

9. ஆராய்ந்தெழுதுக

1. குறிஞ்சிப்பாட்டு பெருங்குறிஞ்சி எனவும் வழங்கப்பட்டது.
2. குறிஞ்சிப் பாட்டு தோழி அறத்தொடு நிற்றலைப் பாடுகின்றது.
3. யாழ்ப்பிரகதத்தனுக்குத் தமிழ்ச் சுவையை அறிவுறுத்தக்கபிலர் பாடியது.
4. குறிஞ்சிப்பாட்டு 99 வகை மலர்களை நிரல் நிறுத்தியது.

A) 1, 2, 3 சரி B) 2, 3, 4 சரி
C) 3, 4 சரி D) அனைத்தும் சரி

10. பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| a) | கீழ்க்கணக்கு நூலாசிரியர்கள் பிற்காலச் சான்றோர் | 1. | பாரதிதாசன் |
| b) | தமிழர் அறநூல்கள் இயற்றுவதைப் பொதுபோக்காகக் கொண்டிருந்தனர் | 2. | மதுரைத்தமிழ் நாகனார் |
| c) | வள்ளுவனைப்பெற்றதால் வையமே புகழ்பெற்றது | 3. | நச்சினார்க்கினியர் |
| d) | எல்லாப் பொருளும் இதன் பாலுள | 4. | ஜி.யு.போப் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 2 | 1 |
| B) | 2 | 1 | 3 | 4 |
| C) | 1 | 2 | 4 | 3 |
| D) | 3 | 4 | 1 | 2 |

11. இம்மையும் இன்பந்தரும் - எது.

A) விருந்தோம்பல் B) அன்புடைமை
C) இனியவை கூறல் D) வாழ்க்கைத் துணைநலம்

12. நிரல்படுத்துக
இந்நான்கும் எஞ்சாமை வேந்தர்க்கியன்பு
A) அறிவு, ஊக்கம், ஈகை, அஞ்சாமை
B) ஈகை, அஞ்சாமை, அறிவு, ஊக்கம்
C) அஞ்சாமை, அறிவு, ஈகை, ஊக்கம்
D) அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம்

13. நீராக நீளும் இந்நோய் - எப்பொழுது?
A) அலர்நாண ஒல்வதோ அஞ்சலோம்பு என்றார்
B) ஊரவர் கௌவை எருவாக அன்னை சொல்
C) அலரெழ ஆருயிர் நிற்கும் அதனை
D) கவ்வையால் கவ்விது காமம் அது இன்றேல்

14. ஆராய்ந்தெழுதுக
1. திரிகடுகம் நூலின் ஆசிரியர் நல்லாதனார்
2. திரிகடுகம் என்பது கண்டங்கத்திரி சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய வேர்களைக் குறிப்பது
3. தமக்கு உரிமையில்லாத பெண்களைவிரும்புவோர் அறிவிலிகள் என்றது திரிகடுகம்.
4. திரிகடுகம் ஆசிரியப் பாவால் இயன்ற நூல்

A) 1, 2 சரி B) 2, 3, 4 சரி
C) 1, 3, 4 சரி D) அனைத்தும் சரி

15. தோல்வற்றிச் சாயினும் சான்றாண்மை குன்றாமை ___ என்றுரைத்த நூல்
A) திருக்குறள் B) திரிகடுகம்
C) சிறுபஞ்சமூலம் D) இன்னாநாற்பது

16. பொருத்துக
a) திருநாவுக்கரசர் 1. காழிவள்ளல்
b) திருஞானசம்பந்தர் 2. தென்னவன் பிரம்மராயன்
c) சுந்தரர் 3. மருணீக்கியார்
d) மாணிக்கவாசகர் 4. வன்தொண்டர்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 2 | 1 |
| B) | 2 | 4 | 1 | 3 |
| C) | 3 | 1 | 4 | 2 |
| D) | 1 | 2 | 3 | 4 |

17. பொருத்துக
a) ஞான மார்க்கம் 1. சுந்தரர்
b) யோக மார்க்கம் 2. சம்பந்தர்
c) கிரியை மார்க்கம் 3. அப்பர்
d) சரியை மார்க்கம் 4. மாணிக்கவாசகர்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 4 | 1 | 2 | 3 |
| B) | 3 | 2 | 1 | 4 |
| C) | 2 | 3 | 4 | 1 |
| D) | 1 | 4 | 3 | 2 |

18. அப்பர் திருத்தலங்கள் சென்ற போது மறைக்கதவுகளைத் திறத்தலும் மூடுதலும் நிகழ்ச்சிகள் நடந்த தலம்

A) திருவாய்மூர் B) திருக்காளத்தி
C) திருவானைக்கா D) திருவெண்காடு

19. கூடாரை வெல்லும் சீர்க்கோவிந்தா உன் தன்னைப் பாடிப்பறை கொண்டுயாம் பெறும் சம்மானம், எனப் பரவியவர்

A) பெரியாழ்வார் B) திருமங்கையாழ்வார்
C) ஆண்டாள் D) நம்மாழ்வார்

20. ஆராய்ந்தெழுதுக
வைணவ சமய இலக்கியக் கோட்பாடுகளில் முக்கியமானவை

1. அகப்பொருளில் இறையுணர்வினை வெளிப்படுத்துவது
2. இயற்கையை இறைநோக்கில் கண்டு இன்புறுவது
3. திருமாலைப் பாடுவதோடு மன்னரையும், பிறமனிதரையும் பாடுவது
4. புதிய யாப்புகளில் பண் சுமந்த பாடல்களைப் பாடுவது.

A) 1, 2, 3 சரி B) 2, 3, 4 சரி
C) 1, 2, 4 சரி D) அனைத்தும் சரி

21. பொருத்துக

a) வீரமாமுனிவர் 1. இரட்சணிய யாத்திரிகம்
b) தத்துவபோதகர் 2. தேம்பாவணி
c) வேதநாயகம்பிள்ளை 3. யேசுநாதர் சரித்திரம்
d) எச்.ஏ. கிருஷ்ணப்பிள்ளை 4. பெத்லேகம் குறவஞ்சி

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 1 |
| B) | 1 | 2 | 3 | 4 |
| C) | 4 | 1 | 2 | 3 |
| D) | 3 | 4 | 1 | 2 |

22. ஆராய்ந்தெழுதுக

1. கிறித்துவக் காப்பியமான தேம்பாவணி வழி நூலாகும்.
2. மேரி அகிர்தாள் அம்மையார்எழுதிய தேவமாதாவின் வரலாறே முதல்நூல்
3. அக்கோன் அடுத்த நற்குணத்த சீரெல்லாம் வானவர் வளனுக்கு ஊட்டினர்.
4. தேம்பாவணி என்பது வாடாமாலை எனப்பொருள்படும்.

A) 1, 2 சரி B) 3, 4 சரி
C) 1, 2, 3 சரி D) அனைத்தும் சரி

23. திடுக்க முற்றது துகில் கொடு பொதிமனந் தெளியாது இடுக்கண் யாது என அறிகிலன் என்றனர் இறகூல் - இதில் வெளிப்படும் மெய்ப்பாடு

A) வெகுளி B) அச்சம்
C) இளிவரல் D) பெருமிதம்

24 படைத்து உமது இறைவனின் திருப்பெயரால் ஓதுவீராக என முகம்மது நபியிடம் உரைத்தவர்

A) ஜிபுரயீல் B) நவ்/பல் C) மைசறா D) ஆமீனா

25. ஒரு பந்து கை கொண்டாட ஒரு செப்பிலைந்து பந்தும் தெரிகொண்டு வித்தையாடும் சித்தரை எதிர்கண்டாளே” என்பதில் சித்தர் என்பவர்

A) தினகரன் B) திருமால்

C) திரிகூடநாதர் D) மன்மதன்

26. பொருத்துக

a) பவனிவந்தனரே மழவிடைப் பவனிவந்தனரே 1. வசந்தவல்லி

b) மோகமாய் ஒரு பெண்ணை முடியில் வைத்தார் 2. குறத்தி

c) பசந்ததோர் பசப்புக்கொண்டாய் 3. கட்டியங்காரன்

d) தோகை நீ யவனைக்கண்டு மோகித்தாய் 4. பாங்கி

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 3 | 1 | 4 | 2 |
| B) | 4 | 3 | 2 | 1 |
| C) | 2 | 4 | 1 | 3 |
| D) | 1 | 2 | 3 | 4 |

27. வெள்ளாறும் கோட்டாறும் புகையால் மூட வெந்தவனம் இந்தவனம் ஒக்கில் ஒக்கும் - இதில் குறிப்பிடும் வெற்றித்தலைவன்

A) முதற் குலோத்துங்கசோழன் B) வீரராசேந்திரன்

C) விக்கிரமசோழன் D) கருணாகரத்தொண்டைமான்

28. சாளுக்கியர் குலத்தில் பிறந்த குலோத்துங்கனுக்கு முடிசூட்டு வதற்கு முன்பிருந்த பெயர்

A) விக்கிரமன் B) இராசராசன்

C) வீரசோழன் D) இராசேந்திரன்

29. ஆராய்ந்தெழுதுக

1. தெள்ளாறெறிந்த நந்திவர்மன் மீது பாடப்பட்டது நந்திக்கலம்பகம்
2. இதுதான் தமிழில் தோன்றிய முதல் கலம்பகம்
3. இந்நூல் நந்திவர்மன் மீது அறம் வைத்துப் பாடப்பெற்றது என்பர்.
4. கலம்பகம் வெண்பாவும், ஆசிரியமும் விரவி வருவது.

A) 1, 3, 4 சரி B) 1, 2, 3 சரி

C) 2 ,3, 4 சரி D) அனைத்தும் சரி

30. அங்குயிரும் இங்குடலும் ஆனமழைக்காலம் அவரொருவர் நாமொருவர் ஆன கொடுங்காலம் - இடம்பெற்ற நூல்

A) நந்திக்கலம்பகம் B) திருப்பள்ளியெழுச்சி

C) திருக்காவலூர்க் கலம்பகம் D) கச்சிக்கலம்பகம்

31. நிரல்படுத்துக : பிள்ளைத்தமிழின் பத்துப்பருவங்கள்

A) காப்பு, தால், முத்தம், சப்பாணி, செங்கீரை, வருகை, அம்புலி, கழங்கு, அம்மானை, ஊசல்

B) காப்பு, சப்பாணி, முத்தம், தால், வருகை, செங்கீரை, கழங்கு, அம்புலி, அம்மானை, ஊசல்

C) காப்பு, அம்புலி, அம்மானை, ஊசல், செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், கழங்கு, வருகை

D) காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, கழங்கு, அம்மானை, ஊசல்

32. ஆராய்ந்தெழுதுக

1. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் சொற்சுவையும், பொருட்சுவையும் பெற்ற பருவம் அம்புலிப்பருவம்
2. இது சாம, பேத, தான, தண்டம் எனும் நான்கு வழிகளால் பாடப்படுவது.
3. அம்புலிப் பருவம் சொல்லோவியம் போல் திகழ்வது
4. இப்பிள்ளைத்தமிழ் குமரகுருபரர் பாடியது.

A) 1, 2, 3 சரி B) 2, 3, 4 சரி

C) 3, 4 சரி D) அனைத்தும் சரி

33. காதலை வேண்டிக் கரைகின்றேன் இல்லையெனில் காதலை வேண்டித் தவிக்கிறேன் - என உரைத்தது.

A) கவிஞர் B) குயில் C) குரங்கன் D) மாடு

34. பொருத்துக

a) கற்பனையின் சூழ்ச்சியென்றெ கண்டுகொண்டேன் 1. பாரதியார்

b) காதலருளித்தமது கையால் கொன்றிடுவீர் 2. குரங்கன்

c) பிச்சைச் சிறுக்கி செய்த பேதகத்தைப் பார்த்தாயோ 3. மன்னவன்

d) ஆவிதுறப்பேன்; அழுதோர் பயனில்லை 4. குயில்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 4 | 2 | 3 |
| B) | 2 | 3 | 4 | 1 |
| C) | 3 | 2 | 1 | 4 |
| D) | 4 | 1 | 3 | 2 |

35. ஆராய்ந்தெழுதுக

1. பாரதிதாசனின் இயற்பெயர் கனகசுப்புரத்தினம்
2. இவரது பாடல்கள் பொதுவுடைமைப் பூங்கா என வருணிக்கப்படுகின்றன.
3. மொழியையும் பெண்ணுரிமையையும் போற்றியவர் இவர்.
4. தமிழச்சியின் கத்தி ஒரு பெண்ணியக்காப்பியம்

A) 1, 2, 3 சரி B) 2, 3, 4 சரி

C) 3, 4 சரி D) அனைத்தும்சரி

36. மங்கைக் கிரங்கி இருட்டும் அழும் வண்ணம் பொழிந்தது மாரி ___ எனப் பாவேந்தர் பாடியது.

A) குடும்ப விளக்கு B) தமிழச்சியின் கத்தி

C) இருண்ட வீடு D) பாண்டியன் பரிசு

37. வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக் கடல்வண்ணன் பண்டொருநாள் கடல்வயிறு கலக்கினையே" - என்றது.

A) முன்னிலைப்பரவல் B) படர்க்கைப்பரவல்

C) கூத்துள் படுதல் D) உள்வரி வாழ்த்து

38. வென்றி மழவிடை யூர்ந்தாற் குரியளிக் கொன்றையம் பூங்குழலாள் எனச்சிலம்பு குறிப்பிடுவது:

A) ஏருழுதல் B) மற்போர்

C) மஞ்சுவிரட்டு D) ஏறுதழுவுதல்

39. பொருத்துக

a) கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதில் 1. வாயிலோன்

b) என் முதற்பிழைத்தது கெடுக வென்னாயுள் 2. கோப்பெருந்தேவி

c) நற்றிறம் படராக் கொற்கை வேந்தே 3. தென்னவன்

d) வெற்றிவேற் தடக்கைக் கொற்றவையல்லள் 4. கண்ணகி

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 4 | 2 | 1 | 3 |
| B) | 1 | 4 | 3 | 2 |
| C) | 2 | 3 | 4 | 1 |
| D) | 3 | 1 | 2 | 4 |

40. வடித்தார் பூங்குழலாளை வானறிய மண்ணறியப் பிடித்தானிவ் வடலரக்கனென்று மாற்றம் பிழையாது என்றுரைத்தவன்

A) மாருதி B) வாலி

C) சுக்கிரீவன் D) விபீடணன்

41. பொருத்துக

a) அப்பொழுதே உயிர்துறக்கு மாணையேன் 1. சீதை

b) மற்றை நல்லணி காணுன் மங்கலங்காத்த மன்னே 2. இராமன்

c) துன்பமும் உவகையும் சுமந்த உள்ளத்தாளாகினாள் 3. அனுமன்

d) இப்பிறவிக்கிருமாதரைச் சிந்தையாலுந்தொடேன் 4. கம்பர்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 2 | 4 | 3 | 1 |
| B) | 1 | 3 | 4 | 2 |
| C) | 3 | 2 | 1 | 4 |
| D) | 4 | 1 | 2 | 3 |

42. ஒரு கிராமத்து நதியில் சிற்பியின் இளம் பருவத் தோழனாகப் பதிவு பெறுபவர்

A) சந்திரசேகரன் B) பழனிச்சாமி

C) ஆறுமுகம் D) கோவிந்தன்

43. ஆராய்ந்தெழுதுக

1. சிற்பியின் ஒரு கிராமத்து நதி கவிதை நூலுக்கு 2002இல் சாகித்திய அகாதமி விருது வழங்கப்பட்டது
2. ஒரு கிராமத்து நதியில் முதல் உலகப்போரின் போதான நாட்டுநிலை பதிவு பெற்றுள்ளது.
3. ஒரு கிராமத்து நதி ஒரு காலகட்டத்தின் வரலாற்று ஆவணம் போலமைந்துள்ளது.
4. அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் பொள்ளாச்சி வட்டார வாழ்வியல் இதில் பதிவு பெற்றுள்ளது.

A) 1, 2, 3 சரி B) 2, 3, 4 சரி C) 1, 3, 4 சரி D) 1, 2, 4 சரி

44. கவிக்கோ அப்துல் ரகுமானுக்குச் சாகித்திய அகாதமி விருது பெற்றுத் தந்த நூல்

A) பால்வீதி B) ஆலாபனை
C) பாலைநிலா D) சுட்டுவிரல்

45. பொருத்துக

a) தமிழக அரசின் பாரதிதாசன் விருது 1. கோவை. ஞானி
b) தமிழக அரசின் கலைமாமணி விருது 2. பாவண்ணன்
c) இலக்கியச் சிந்தனை விருது 3. ஆ.மாதவன்
d) கனடா தமிழ் இலக்கியத் தோட்ட விருது 4. அப்துல் ரகுமான்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 2 | 1 |
| B) | 1 | 4 | 3 | 2 |
| C) | 2 | 1 | 4 | 3 |
| D) | 3 | 2 | 1 | 4 |

46. நிரல்படுத்துக: ஏ.பி.ஜேஅப்துல்கலாம் செயல்படுத்திய ஏவுகணைத்திட்டங்கள்

A) அக்னி, பிருத்வி, திரிசூல், நாக்
B) நாக், அக்னி, பிருத்வி, திரிசூல்
C) திரிசூல், அக்னி, பிருத்வி, நாக்
D) பிருத்வி, திரிசூல், நாக், அக்னி

47. அப்துல்கலாம் அவர்களின் பள்ளிக்கால விஞ்ஞான ஆசிரியர்

A) அய்யாதுரை சாலமன் B) சிவசுப்பிரமணிய ஐயர்
C) ஸ்ரீனிவாசன் D) ஸ்பாண்டர்

48. பொருத்துக

a) ராஜம் கிருஷ்ணன் 1.பெண்ணியம் அணுகுமுறைகள்
b) சுப்ரபாரதிமணியன் 2. காலந்தோறும் பெண்
c) இரா.பிரேமா 3. சமையலறைக் கலயங்கள்
d) அனார் 4. ஓவியம் வரையாத் தூரிகை

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 1 | 4 |
| B) | 1 | 2 | 4 | 3 |
| C) | 4 | 1 | 3 | 2 |
| D) | 3 | 4 | 2 | 1 |

49. ஆவுத்தி காத்தா என்னிக்கி எம்புள்ளவோளுக்கு வயிராற கஞ்சி ஊத்துவானோ" என சுந்தராம்பாள் கலங்குவதைக்காட்டும் நாவல்

A) கீதாரி B) கற்றாழை
C) வாழப்பழகிய சந்தனமரம் D) அளம்

50. சு.தமிழ்ச்செல்வியின் அளம் - நாவலின் பாடுபொருள்

A) பெண்ணியம் B) வறுமைச்சிக்கல்
C) பிரிவுத்துயர் D) பொருந்தாமணம்

51. ஆராய்ந்தெழுதுக:
தோப்பில் முகமது மீரானின் படைப்புகளில் வெளிப்படும் குரல்

1. இடதுசாரிச்சிந்தனை
2. முஸ்லீம் சமுதாயத்தைச் சுரண்டி வாழ்வோருக்கு எதிரான குரல்
3. எழுத்தாளர் வாழக்கூடிய சமுதாய வரலாற்றுப்பதிவு
4. இசுலாமிய எதிர்ப்புணர்வு

A) 1, 2, 3 சரி B) 2, 3, 4 சரி
C) 1, 3, 4 சரி D) அனைத்தும் சரி

52. தோப்பில் முகமது மீரானின் ஒரு மாமரமும் கொஞ்சம் பறவைகளும் நாவலில் தொனிப்பது

A) மார்க்சீயச் சிந்தனை B) சமுதாயச்சீரழிவை எடுத்துரைப்பது
C) பெண்ணியச்சிந்தனை D) எள்ளல் தொனி

53. ஒரு தனி முதல்வன் உணர்வன் உன்னுளம் உன்னன்பு உண்மையேல் இன்னமும் காப்பன்" என மனோன்மணீயம் நாடகத்தில் உரைப்பவர்

A) ஜீவகன் B) நாராயணன்
C) சுந்தரர் D) புருடோத்தமன்

54. ஆராய்ந்தெழுதுக

1. மனோன்மணீயம் நாடகத்தில் உயிர்த்துடிப்பான பகுதி சிவகாமி சரிதம்
2. நாடகச்சுவை மிகுவதற்காக சிவகாமி சரிதையை அமைத்தார்
3. இப்பகுதி இல்லையென்றால் மனோன்மணீயம் நாடகம் சிறப்புற்றிராது
4. குறள் வெண் செந்துறைப்பாவகையில் முதன் முதலில் தொடர்நிலைச் செய்யுளையாத்தவர் சுந்தரம் பிள்ளை

A) 1, 2, 3 சரி B) 1, 2, 4 சரி
C) 2, 4 சரி D) அனைத்தும் சரி

55. பொருத்துக

a) இன்குலாப் 1. கோபால்
b) கவிக்கோ 2. கி. பழனிச்சாமி
c) கலாப்பிரியா 3. சாகுல்அமீது
d) கோவை ஞானி 4. அப்துல் ரகுமான்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 2 | 3 | 4 | 1 |
| C) | 4 | 1 | 2 | 3 |
| D) | 3 | 4 | 1 | 2 |

56. ஆராய்ந்தெழுதுக
1. இன்குலாப் ஒரு பொதுவுடைமைக் கவிஞர்
2. இவரது அவ்வை, மணிமேகலை நாடகங்களிலும் தம் கொள்கைகளைப் புகுத்தியுள்ளார்.
3. அவ்வை ஒரு வரலாற்று நாடகம்
4. இன்குலாப் 2-12-2016இல் மறைந்தார்

A) 1, 2, 3 சரி
B) 1, 2, 4 சரி
C) 3, 4 சரி
D) அனைத்தும் சரி

57. நிரல்படுத்துக : எழுத்துக்கள் தோன்றுதல்
உந்திமுதலா முந்துவளி தோன்றித் தலையினும்மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇ
A) அண்ணமும், மூக்கும், நாவும், இதழும், பல்லும் உளப்பட எண்முறை
B) பல்லும், நாவும், இதழும், மூக்கும், அண்ணமும் உளப்பட எண்முறை
C) பல்லும், இதழும், நாவும், மூக்கும், அண்ணமும் உளப்பட எண்முறை
D) இதழும், பல்லும், நாவும், அண்ணமும், மூக்கும் உளப்பட எண்முறை

58. மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்-
A) உயிரெழுத்து
B) ஆய்தம்
C) மெய்யெழுத்து
D) சார்பெழுத்து

59. தேர்ந்தெடுத்து நிரப்புக
இயல்பாகுநவும் உறழாகுநவு மென்று
ஆயீரியல ______வரினே”
A) உயிரெழுத்து
B) மெல்லெழுத்து
C) வல்லெழுத்து
D) ஆய்தஎழுத்து

60. ஏழ் என்னும் பெயர்க்குப் புணர்ச்சியில் வரும் சாரியை
A) ஆன் எனும் சாரியை
B) வற்றுச் சாரியை
C) இன்னென் சாரியை
D) அன்னென் சாரியை

61. ஆராய்ந்தெழுதுக
பாலைத் தெளிவாக உணர்த்தி நிற்கும் உயர்திணைப் பெயர்கள்
1. அவன் என்னும் சொல் முதலாக யாவர் எனும் சொல் இறுதியாகக் கூறப்பட்ட பதினைந்து பெயர்கள்
2. அது, இது, உது முதலாக யாது, யா, யாவை எனும் சொல் இறுதியாகக் கூறப்பட்ட பதினைந்து பெயர்கள்
3. இயற்பெயர், சினைப்பெயர், சினை முதற்பெயர் எனும் பன்னிரெண்டு பெயர்கள்

A) 1 சரி
B) 1, 2 சரி
C) 2, 3 சரி
D) அனைத்தும் சரி

62. இன்னபெயரே இவையெனல் வேண்டின் முன்னம் சேர்த்தி முறையின் உணர்தல், இதில் முன்னம் - என்பது
A) பால்திரிபு
B) தெரிபு வேறு நிலையல்
C) கொள்வழி உடையன
D) சொல்லுவானது குறிப்பு

63. "இறப்பே யெதிர்வே யாயிரு காலமும் சிறப்பத் தோன்றும் மயங்கு மொழிக் கிளவி" இதில் கூறப்படுவது

A) கால மயக்கம் B) இடமயக்கம்
C) வேற்றுமை மயக்கம் D) திணை மயக்கம்

64. செய்யுமென் வாய்பாட்டு வினை முற்று படர்க்கை இடத்தில்

A) ஆண்பாலில் மட்டும் வரும்
B) பெண்பாலில் மட்டும் வரும்
C) ஒன்றன் பாலில் மட்டும் வரும்
D) நான்கு பாலிலும் வரும்

65. "இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல் விரைந்த பொருள் என்மனார்"என்றது

A) எதிர்காலத்தில் வரும் வினைச்சொல் பொருளை
B) வாராக்காலத்தும் நிகழ்காலத்தும் வரும் வினைச்சொல் பொருளை
C) நிகழ்காலத்தில் வரும் வினைச்சொல் பொருளை
D) முக்காலத்தும் வரும் வினைச்சொல் பொருளை

66. நடுவண் ஐந்திணை நடுவணது ஒழியப் படுதிரை வையம் பாத்திய பண்பே" இதில் நடுவணது ஒழிய என்றது

A) குறிஞ்சித்திணை B) முல்லைத்திணை
C) பாலைத்திணை D) மருதத்திணை

67. குறிஞ்சித்திணைக்குரிய காலம்

A) காரும், மாலையும் B) கூதிர், யாமம்
C) நண்பகல், வேனில் D) வைகறை, விடியன்

68. நிரல்படுத்துக
"மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்தே"

A) அரசர், அந்தணர், வணிகர், வேளாளர்
B) வணிகர், வேளாளர், அந்தணர், அரசர்
C) அந்தணர், வேளாளர், வணிகர், அரசர்
D) அந்தணர், அரசர், வணிகர், வேளாளர்

69. தேர்ந்தெடுத்து நிரப்புக
"ஏமம் பேரூர்ச் சேரியும் சுரத்தும் தாமே செல்லும் ………… உளரே"

A) செவிலியும் B) தாயரும் C) தோழியும் D) தலைவனும்

70. பொருத்துக

a) வெட்சி 1. குறிஞ்சி
b) வஞ்சி 2. முல்லை
c) உழிஞை 3. மருதம்
d) தும்பை 4. நெய்தல்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 1 |
| B) | 1 | 2 | 3 | 4 |
| C) | 3 | 4 | 1 | 2 |
| D) | 4 | 1 | 2 | 3 |

71. ஆராய்ந்தெழுதுக

"கொற்றவள்ளை ஓரிடத்தான"

1. கொற்றவள்ளை புகழ்தற் கருத்தாகுமிடத்து பாடாண்திணையாம்
2. கொற்றவள்ளையின் துறை கூறுதற் கருத்தாயின் வஞ்சியாம்
3. கொற்றவள்ளை கடவுள் வாழ்த்தோடு பொருந்திவரும்
4. கொற்றவள்ளை பாலறி மரபில் பொருநர் கண்ணும் பொருந்திவரும்

A) 1, 2 சரி B) 2, 3 சரி
C) 1, 3, 4 சரி D) 3, 4 சரி

72. துளி. அணி, வடி, தனி ___ என இரண்டாம் எழுத்து ஒன்றாதாயினும் மெய்ம்மீது ஏறிய உயிர் ஒன்றிவந்தமையால்

A) வல்லின எதுகை B) மெல்லின எதுகை
C) உயிரெதுகை D) இடையின எதுகை

73. ஆராய்ந்தெழுதுக

1. அ, ஆ எனப்பாட்டில் விட்டிசைக்கும் போது தனிக்குறில் நேரசையாகும்
2. தனி நெடில் நேரசையாகும்
3. நெட்டொற்று நேரசையாகும்
4. குறில் நெடில் நேரசையாகும்

A) 1, 2, 4 சரி B) 2, 4 சரி
C) 3, 4 சரி D) 1, 2,3 சரி

74. ஆராய்ந்தெழுதுக

1. நிரையீற்று நாலசைச்சீர்கள் நிரையீற்றுப் பொதுச்சீர் எனப்படும்.
2. இதனை நிழற்சீர் எனவும் வழங்குவர்
3. இவ்வெட்டுச்சீர்களையும் வஞ்சி உரிச்சீர் போலக் கொள்ள வேண்டும்.
4. இது ஒன்றிய வஞ்சித்தளை ஒன்றா வஞ்சித்தளை எனவும் வழங்கப்படும்.

A) 1, 2 சரி B) 2,3 சரி
C) 2, 4 சரி D) அனைத்தும் சரி

75. சீரும் தளையும் கெடவந்த விடத்து அலகு பெறாதன

A) ஐகாரக்குறுக்கம் B) உயிரளபெடை
C) குற்றியலிகரம் D) ஒற்றெழுத்து அளபெழுந்த விடத்து

76. உவமையின் தன்மையை உவமேயத்தில் ஏற்றிக் கூறுவது

A) உவமையணி B) உருவக அணி
C) எடுத்துக்காட்டுவமையணி D) வஞ்சப்புகழ்ச்சியணி

77. ஊருணி நீர் நிறைந்தற்றே உவகையாம் பேரறிவாளன் திரு" இக்குறளில் பயின்ற அணி

A) பின்வருநிலையணி B) தீவக அணி
C) தற்குறிப்பேற்ற அணி D) உவமையணி

78. "போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி வாரல் என்பனபோல் மறித்துக்கைகாட்ட" இதிலமைந்த அணி

A) தற்குறிப்பேற்ற அணி B) உருவக அணி
C) தீவக அணி D) பின்வருநிலையணி

79. பொருள்வேறுபாடு உணர்த்தாமல் இடத்தால் மட்டும் வேறுபடும் ஒலிகள்

A) முதலொலிகள் B) ஒலியெழுத்து

C) வகையொலிகள் D) உயிரொலிகள்

80. ஆராய்ந்தெழுதுக

1. உயிர்ஒலிகள் மேலெழும் உயரம் கொண்டு ஏழுவகையாக வகைப்பபடுத்தப்படுகின்றன.
2. நா நுனி முன்நோக்கி எழுதல், நாஅடி பின்னண்ணம் நோக்கி எழுதல்; நா நடு அண்ணம் நோக்கி எழுதல் என மூவகையாகப் பகுப்பர்.
3. இதழ் குவிவன, இதழ் குவியாதன என்ற பாகுபாடில்லை.
4. இவ்வடிப்படையில் உலகப் பொது எழுத்து அறிகுறிகளே (Phonetic Script) படைக்கப்படுகின்றன.

A) 1, 2, 3 சரி B) 2, 3, 4 சரி

C) 3, 4 சரி D) 1, 2, 4 சரி

81. "இசையில் திரிதல் நிலை இயபண்பு" எனத் தொல்காப்பியம் குறிப்பிடுவதை மொழி இயலார் இவ்வாறு குறிப்பர்.

A) வாக்கிய ஒலியழுத்தம் (Intonation)

B) குரல் அழுத்தம் (Pitch)

C) பிரித்திசைத்தல் (Juncture)

D) அசை ஒலியழுத்தம் (Stress)

82. ஆராய்ந்தெழுதுக: மாற்றொலிகள் பகுப்பில்

1. ஒரே இடத்தில் மாறி ஒலித்துப் பொருள் மாறினால் அவை தனி ஒலியன்கள் (Phonemes)
2. ஒரே இடத்தில் மாறி ஒலித்துப் பொருள் மாறாமல் இருந்தல் அவை வகையொலிகள் (Variations)
3. வெவ்வேறு இடத்தில் வெவ்வேறு வகையாக ஒலித்து இவற்றின் இன ஒப்புமை ஒலிகளோடு உறழப் பொருள் மாறாமல் இருந்தால் மாற்றொலிகள் (Allophones)
4. மாற்றொலிகளின் இடச்சார்பு இன்றியமையாதது இல்லை என்றார் கால்டுவெல்.

A) 1, 2, 3 சரி B) 2, 3, 4 சரி

C) 3, 4 சரி D) அனைத்தும் சரி

83. பொருளன்களைக் கண்டறியஆறு முறைமைகளை முன்வைத்தவர்

A) புளூம் பீல்டு B) W.D. விட்னே

C) T. பரோ D) நைடா

84. பொருளன்களில் ஒரு வடிவத்திற்கும் மற்றொரு வடிவத்திற்கும் உள்ள வேறுபாடுகளைக் காட்டுவது

A) உருபன் இயைபொலி மாறுதல்கள்

B) உருபன் சூழ்நிலை மாற்றம்

C) ஒலியன் சூழ்நிலை மாற்றம்

D) பொருளன் திரிதல்

85. ஆராயந்தெழுதுக.

1. உரிச்சொற்கள் இடைச்சொற்களோடு இயைந்து சொல்லாகும் இயல்பை விளக்குவது சொல்லிலக்கணம்
2. முழுச்சொற்கள் தொடர்ந்து சொற்றொடராகும் அமைப்பை விளக்குகிறது தொடரியல்.
3. தொடரமைப்பு (Construction) தொடர்முறை (Word Order) தொடரியைபு (Concord) எனத்தொடரியலைப் பிரிப்பர்.
4. மாற்றிலக்கண முறையை சாம்ஸ்கி விளக்கினார்.

A) 1, 2 சரி B) 3, 4 சரி
C) 2, 3, 4 சரி D) அனைத்தும் சரி

86. கால்டுவெல்லுக்கு முன்னர் தமிழ் முதலான மொழிகளைத் தென்னிந்தியக்கிளை மொழிகள் என்றழைத்தவர்

A) வில்லியம் கேரி B) எல்லீஸ்
C) இ.எச். டட்டில் D) டி.பர்ரோ

87. ஆராய்ந்தெழுதுக : திராவிட மொழிப்பாகுபாட்டில்

1. கால்டுவெல்லின் பகுப்பு சரியில்லை என்றார் பர்ரோ.
2. அவரது பொதுக்கொள்கை நிலவியல் மற்றும் சிறப்பியல்களின் அடிப்படையில் உருவானது.
3. மூலத்திராவிட மொழியைத்தென் திராவிடம், நடுத்திராவிடம், வடதிராவிடம் எனப் பகுத்தார் பர்ரோ.
4. கமில் சுவலபில், சுப்பிரமணியம் போன்றோர் இப்பகுப்பை மறுத்தனர்.

A) 1, 2, 3 சரி B) 2, 3, 4 சரி
C) 3, 4 சரி D) 2, 4 சரி

88. பொருத்துக

a) தி.வே. கோபாலையர் 1. சதுரகராதி
b) திவாகரர் 2. தமிழ் இலக்கணப்பேரகராதி
c) வீரமண்டலப் புருடர் 3. சேந்தன் திவாகர நிகண்டு
d) வீரமாமுனிவர் 4. சூடாமணி நிகண்டு

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 4 | 2 | 1 | 3 |
| B) | 3 | 1 | 2 | 4 |
| C) | 2 | 3 | 4 | 1 |
| D) | 1 | 4 | 3 | 2 |

89. பொருத்துக

a) கொங்குவட்டார வழக்குச் சொல்லகராதி — 1. பெருமாள் முருகன்
b) கொங்குவட்டாரச் சொல்லகராதி — 2. கி. இராஜநாராயணன்
c) நாஞ்சில் நாட்டு வட்டார வழக்குச்சொல்லகராதி — 3. இரவிக்குமார்
d) வட்டார வழக்குச் சொல்லகராதி — 4. அ.கா. பெருமாள்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 3 | 1 | 4 | 2 |
| C) | 2 | 4 | 1 | 3 |
| D) | 4 | 3 | 2 | 1 |

90. பொருத்துக

a) ஒப்பீட்டுமுறைத்திறனாய்வு — 1. வ.வே.சு.வின்கம்பராமாயணரசனை
b) அழகியல் திறனாய்வு — 2. ந.வி.ஜெயராமனின் பாடாண்திணை
c) விதிமுறைத் திறனாய்வு — 3. க.த. திருநாவுக்கரசின் திருக்குறள் நீதிஇலக்கியம்
d) பாராட்டுமுறைத்திறனாய்வு — 4. ஔவை சு. துரை சாமியின் சிலப்பதிகார ஆராய்ச்சி

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 1 | 2 |
| B) | 2 | 4 | 3 | 1 |
| C) | 1 | 2 | 4 | 3 |
| D) | 3 | 1 | 2 | 4 |

91. ஆராய்ந்தெழுதுக

1. உருவவியலோடு நெருங்கிய உறவு கொண்டது மொழியியல் வழியிலான திறனாய்வு
2. காலம் -இடம் பற்றிய சார்பியல் கோட்பாடு இலக்கியத்தின் உள்நிலைப் பரிமாணத்தை புரிந்து கொள்ள உதவும் அறிவியல் நெறி அணுகுமுறை
3. இலக்கியத்தை வரலாற்றுப் பின்னணியில் காண்பதில் உதவுகிறது வரலாற்றியல் திறனாய்வு
4. அறிவியல் திறனாய்வு தமிழில் பரவலாகக் காணப்படவில்லை.

A) 1, 2, 3 சரி
B) 2, 3, 4 சரி
C) 3, 4 சரி
D) அனைத்தும் சரி

92. பாரதியார், வால்ட்விட்மன் கவிதைகளில் ஒப்புமையை ஆராய்ந்தவர்

A) க.சிவத்தம்பி
B) எம்.எ. E/khd
C) ச.சீனிவாசன்
D) க. கைலாசபதி

93. தமிழில் நவீனத்துவம் பின் நவீனத்துவம் நூலின் ஆசிரியர்

A) ஞானி
B) தமிழவன்
C) தி.சு. நடராசன்
D) தொ. பரமசிவன்

94. எம்.ஜி. சுரேஷின் "அட்லாண்டிஸ்மனிதன் மற்றும் சிலருடன்" என்ற பின் நவீனத்துவப் படைப்பு

A) எதார்த்தநாவல்
B) மார்க்சீய அழகியல் நாவல்
C) கியூ பிசநாவல்
D) பெண்ணிய நாவல்

95. பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| a) | நந்தனார் தெரு | 1. | பூமணி |
| b) | ஆனந்தாயி | 2. | விழி. பா. இதயவேந்தன் |
| c) | சங்கதி | 3. | ப. சிவகாமி |
| d) | பிறகு | 4. | பாமா |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 4 | 1 | 2 | 3 |
| B) | 3 | 2 | 1 | 4 |
| C) | 1 | 4 | 3 | 2 |
| D) | 2 | 3 | 4 | 1 |

96. அகப் பரப்புத் திறனாய்வு என்பது

A) பெண்ணியத் திறனாய்வு
B) தலித்தியத் திறனாய்வு
C) சமூகவியல் திறனாய்வு
D) அரசியல் பகுப்பாய்வு

97. பொருத்துக

| | | |
|---|---|---|
| a) | ஒப்பிலக்கிய மரபும் திறனும் | 1. இரா. காஞ்சனா |
| b) | இலக்கிய ஒப்பாய்வுக்களங்கள் | 2. ஜான் சாமுவேல் |
| c) | இந்திய மொழிகளில் ஒப்பிலக்கியம் | 3. மு.கு. ஜகந்நாத ராஜா |
| d) | இந்திய ஒப்பிலக்கியம் | 4. அ. பிச்சை |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 2 | 3 | 4 | 1 |
| C) | 3 | 4 | 1 | 2 |
| D) | 4 | 1 | 2 | 3 |

98. ஆராய்ந்தெழுதுக : மொழி பெயர்ப்பில்

1. முதலில் பொருளடிப்படையிலும் பின்னர் நடை அடிப்படையிலும் அமைத்தல் வேண்டும் என்றார் நைடா.
2. தரும்மொழியிலுள்ள கருத்தையோ, செய்தியையோ பெறும் மொழிக்குப் பெயர்ப்பு செய்யும் பொழுது எவ்வித மாற்றமும், பெறுதல் கூடாது.
3. தரும்மொழிப் பனுவலுக்கான நிகரணைப் பெறும் மொழியில் தேடுவதென்றார் பீட்டர் நியூமார்க்.
4. இரண்டு மொழிகளைக் கருத்தளவிலும் அமைப்பளவிலும் இணைத்து ஒரு புதிய மொழியாக அடையாளம் காட்டுவதை மொழிபெயர்ப்பு நடவடிக்கை என்பர்.

A) 1, 2, 3 சரி
B) 1, 2, 4 சரி
C) 2, 3, 4 சரி
D) அனைத்தும் சரி

99. பொருத்துக

| | | |
|---|---|---|
| a) | மொழிபெயர்ப்பியல் | 1. சேது மணிமணியன் |
| b) | மொழிபெயர்ப்பு நூற்றொகை | 2. எஸ். மகாராஜன் |
| c) | மொழிபெயர்ப்பியல்கோட்பாடுகளும்உத்திகளும் | 3. சு.சண்முகவேலாயுதம் |
| d) | மொழி பெயர்ப்பது எப்படி | 4. ச. சிவகாமி |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 4 | 1 | 2 | 3 |
| B) | 2 | 3 | 4 | 1 |
| C) | 3 | 4 | 1 | 2 |
| D) | 1 | 2 | 3 | 4 |

100. எஸ்.கே. பொற்றேகாடின் ”விஷகன்னிகா” நூலை தமிழில் மொழி பெயர்த்தமைக்குச் சாகித்திய அகாதமி விருது பெற்றவர்

A) சிற்பி பாலசுப்பிரமணியன் B) பொன்னீலன்
C) குளச்சல் மு. யூசப் D) குறிஞ்சி வேலன்

101. ஆராய்ந்தெழுதுக.

1. இலக்கிய ஆராய்ச்சியில் புதிய விளக்கங்களும் எதிர்பார்க்கப்படுகிறது.
2. எதை ஆராய்ச்சி செய்வது என்று ஆராய்வதே ஓர் தனிப்பட்ட ஆராய்ச்சியாகும்.
3. மிகுதியான குறிப்புக்களைத் தேடித் தொகுப்பது அவசியம் இல்லை.
4. பொருளாய்வுக் கட்டுரையில் அடிக்குறிப்புகள் தவறாமல் இடம் பெறவேண்டும்

A) 1, 2, 3 சரி B) 2, 3, 4 சரி
C) 1, 2, 4 சரி D) அனைத்தும் சரி

102. பொருத்துக

| | | |
|---|---|---|
| a) | முருகு | 1. கூத்தராற்றுப்படை |
| b) | மலைபடுகடாஅம் | 2. குறிஞ்சிப்பாட்டு |
| c) | பத்துப்பாட்டில் மிகச்சிறியது | 3. புலவராற்றுப்படை |
| d) | தொன்னூற்றொன்பது மலர்களைக் கூறுவது | 4. முல்லைப்பாட்டு |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 1 | 4 |
| B) | 4 | 2 | 3 | 1 |
| C) | 1 | 4 | 2 | 3 |
| D) | 3 | 1 | 4 | 2 |

103. பொருத்துக : சாகித்ய அகாதமி விருது பெற்றவர்கள்

| | | |
|---|---|---|
| a) | வா.செ. குழந்தைசாமி | 1.வாழும் வள்ளுவம் |
| b) | பொன்னீலன் | 2. இலையுதிர்காலம் |
| c) | மேலாண்மை பொன்னுச்சாமி | 3. புதிய தரிசனங்கள் |
| d) | நீலபத்மநாபன் | 4. மின்சாரப்பூக்கள் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 3 | 4 | 2 |
| B) | 2 | 4 | 3 | 1 |
| C) | 3 | 1 | 2 | 4 |
| D) | 4 | 2 | 1 | 3 |

104. பொருத்துக

| | | |
|---|---|---|
| a) | இமையம் | 1. கோணல் பக்கங்கள் |
| b) | சாருநிவேதிதா | 2. பிரதிகளின் ஊடே பயணம் |
| c) | ந. முருகேசபாண்டியன் | 3. ஆறுமுகம் |
| d) | ராஜ்கௌதமன் | 4. காலச்சுமை |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 4 | 2 | 3 | 1 |
| B) | 1 | 2 | 4 | 3 |
| C) | 3 | 4 | 1 | 2 |
| D) | 3 | 1 | 2 | 4 |

105. பொருத்துக: மலையாள இலக்கியம்

| | | |
|---|---|---|
| a) | இந்துலேகா | 1. வைக்கம் முகம்மது பஷீர் |
| b) | குந்தலத | 2. சந்துமேனன் |
| c) | ரெண்டிடங்கழி | 3. அப்பு நெடுங்காடி |
| d) | பால்யகாலசகி | 4. தகழிசிவசங்கரப்பிள்ளை |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 1 |
| B) | 3 | 4 | 1 | 2 |
| C) | 4 | 1 | 2 | 3 |
| D) | 1 | 2 | 3 | 4 |

106. சண்டாள பிச்சுகி எனும் மலையாளக் காவியம் படைத்தவர்

A) ஓ. என்.வி. குருப்பு
B) எழுத்தச்சன்
C) குமாரனாசான்
D) சச்சிதானந்தன்

107. பொருத்துக

| | | |
|---|---|---|
| a) | தங்கங் கந்தசாமி | 1. பண்டைத்தமிழர் போர் நெறி |
| b) | கா. அப்பாத்துரை | 2. போரியல் அன்றும் இன்றும் |
| c) | கா. கோவிந்தன் | 3. தென்னாட்டுப்போர்க் களங்கள் |
| d) | செந்துறை முத்து | 4. தமிழர் போர்நெறி |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 3 | 2 | 4 | 1 |
| B) | 2 | 3 | 1 | 4 |
| C) | 1 | 4 | 3 | 2 |
| D) | 4 | 1 | 2 | 3 |

108. ஆராய்ந்தெழுதுக

1. பழைய எழுத்து வடிவங்களை மாற்றி அச்சுக்கலைக்கு ஏற்றவாறு செய்தவர் கால்டுவெல்
2. உயிர்மெய்க் குறிலுக்கு அருகே புள்ளி இடப்படல் வேண்டும் என்றிருந்த போது நச்சினார்க்கினியர் அருகே பெற்ற புள்ளியை இக்காலத்தார் காலாக எழுதினார் என்று குறிப்பிடுவதால் கால்டுவெல்லுக்கு முன்னரே இம்முயற்சி இருந்தது தெளிவு.
3. தந்தை பெரியார் செய்த சீர்திருத்தத்தால் பதின்மூன்று வரிவடிவங்களில் ஏழு குறைந்துவிட்டன.
4. இப்போது தமிழ் எழுத்துத் திருத்தம் வேண்டாம் என்று மறுத்தவர் கி.ஆ.பெ. விசுவநாதம்

A) 1, 2 சரி B) 3, 4 சரி
C) 2, 3, 4 சரி D) அனைத்தும் சரி

109. தமிழ்ச்சுவடிகள் (அட்டவணை) என்ற நூலை வெளியிட்டு அதற்கு விளக்க அட்டவணையும் வெளியிட்டவர்

A) மு.கோ. இராமன் B) பத்மநாபன் தம்பி
C) நிர்மலா தேவி D) பத்மகுமாரி

110. நாஞ்சில் நாட்டு முதலியார் ஓலைகள் சுவடிகளிலிருந்து பெறப்படுவது

A) நாஞ்சில் நாட்டு வரலாறு, பண்பாடு, அரசியல்
B) திருவாங்கூரின் சமூகப் பொருளாதார வரலாறு
C) மலையாழ்மை, தமிழ் -மலையாளம் , தமிழ் ஆகிய எழுத்துமுறை
D) திருவாங்கூர் அரசின் வருவாய்க்கணக்குகள்.

111. ஆராய்ந்தெழுதுக

1. கணினியில் வலைப்பூக்கள் என்பது இணையப்படைப்புகளை
2. ஜெயமோகன், எஸ்.இராமகிருஷ்ணன், வைரமுத்து, அப்துல்ரகுமான் முதலான எழுத்தாளர்களின் படைப்புகளை வலைப்பூக்களில் காணலாம்.
3. வலைப்பூக்களிலான படைப்புகளுக்கு ஒரு சில நிமிடங்களிலேயே விமர்சனம் வந்தடைகின்றன.
4. தமிழ் இணையப் பல்கலைக்கழகம் பட்டப்படிப்புகளை இணையவழி செயல்படுத்துகின்றது.

A) 1, 2, 3, 4 சரி B) 1, 2, 3 சரி
C) 2, 3 சரி D) 2, 3, 4 சரி

112. பொருத்துக

a) மாசத்தினசரிதை 1. நாடகத்துறை இதழ்
b) வெளி 2. தமிழிலக்கிய இதழ்
c) குங்குமம் 3. .இந்திய மொழிகளில் முதல்இதழ்
d) காலச்சுவடு 4. வெகுசனப் பொழுதுபோக்கு இதழ்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 2 | 1 |
| B) | 3 | 1 | 4 | 2 |
| C) | 2 | 4 | 1 | 3 |
| D) | 1 | 2 | 3 | 4 |

113. நிரல்படுத்துக : முக்கிய கோடைக்காலச் சுற்றுலா மையம்
   A) கொடைக்கானல், ஊட்டி, ஏற்காடு, ஹைவேவிஸ்
   B) ஊட்டி, ஹைவேவிஸ், கொடைக்கானல், ஏற்காடு
   C) ஹைவேவிஸ், ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு
   D) ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு, ஹைவேவிஸ்

114. பொருத்துக
   a) விளாடி மிர்பிராப் — 1. புராண அமைப்பு ஆய்வு
   b) லெவிஸ்ட் ராஸ் — 2. செயல்
   c) ஆலன் டண்டிஸ் — 3. சூழல்
   d) மாலினோவ்ஸ்கி — 4. கதைக்கூறன்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 3 | 4 | 1 | 2 |
| C) | 4 | 3 | 2 | 1 |
| D) | 2 | 1 | 4 | 3 |

115. பொருத்துக
   a) தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும் — 1. தே. லூர்து
   b) நாட்டுப்புறவியல் கோட்பாட்டுப் பார்வைகள் — 2. நா. வானமாமலை
   c) நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள் — 3. பக்தவத்சல ரெட்டி
   d) பழங்கதைகளும் பழங்குடிகளும் — 4. க. காந்தி

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A) | 3 | 4 | 2 | 1 |
| B) | 1 | 2 | 3 | 4 |
| C) | 4 | 3 | 1 | 2 |
| D) | 2 | 1 | 4 | 3 |

116. சடங்குகள் குறித்த ஆய்வான தங்கக்கிளை (Golden Bough) நூலைப் படைத்தவர்
   A) ஆண்டி ஆர்னே
   B) வில்லியம் பாஸ்கம்
   C) ஜெ.ஜி. பிரேசர்
   D) நிச்சர்ட் எம் டார்சன்

117. பண்பாட்டு மானிடவியல் நூலின் ஆசிரியர்
   A) ஆ. சிவசுப்பிரமணியன்
   B) ஆ. செல்லப்பெருமாள்
   C) ஆறு. இராமநாதன்
   D) பக்தவத்சல பாரதி

118. ஆராய்ந்தெழுதுக
   1. மானிடவியலார் பரவல் கோட்பாட்டினரை நான்கு பிரிவினராகப் பகுத்தனர்.
   2. பிரிட்டிஷ் பரவலியல் கோட்பாட்டினர் (எகிப்தியவியலார்) ___வி. ஸ்மித்
   3. ஜெர்மானியப் பரவல் கோட்பாட்டினர் - மாக்ஸ் முல்லர்
   4. அமெரிக்கப் பரவல் கோட்பாட்டினர் - குரோபர், போயஸ்

   A) 1, 2, 3 சரி
   B) 2, 3, 4 சரி
   C) 3, 4 சரி
   D) அனைத்தும் சரி

119. சைவ சமயக் கருத்துக்களை முதன் முதலாக விளக்க எழுந்த முழுமுதல் நூல்

A) தேவாரம்  B) கைவல்ய நவனீதம்

C) திருவாசகம்  D) திருமந்திரம்

120. சித்தாந்த சைவம் கண்டுரைத்த மகான்

A) குமரகுருபரர்  B) தாயுமானவர்

C) இராமலிங்க அடிகள்  D) பட்டினத்தார்